# **DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No.SC .No. 41/2019 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W. 8<br>Defence<br>Court |

Name ரவிக்குமார்

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06/03/2019.

*முதல் விசாரணை:*

*நான் கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். கார் டிரைவராக வேலை செய்து வருகிறேன். சரியான தேதி தெரியவில்லை 05.01.2014 ஆக இருக்க கூடும் கோவில்பட்டியிலிருந்து திருச்செந்துாருக்கு பாதயாத்திரை செல்வதற்காக நாங்கள் வந்து கொண்டிருந்தோம். நாங்கள் புதியம்புத்துார் அருகில் வரும்போது எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த ஒரு நபர் போன் பண்ணினார் யார் என்று ஞாபகம் இல்லை . ஆறுமுகமும், துரைப்பாண்டியும் சேர்ந்து சமுத்திரத்தை மேல தட்டப்பாறைக்கும் கீழ தட்டப்பாறைக்கும் இடைப்பட்ட இடத்தில் வைத்து வெட்டியதாக கூறினார்கள் நாங்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு இரவு 08.30 லிருந்து 09.00க்குள் இருக்கும் அந்த இடத்தில் 2 ஆய்வாளர் ஒரு போலீசார் நின்றிருந்தார்கள். அவர்கள் படம்*

வரைந்து கொண்டிருந்தார்கள். ஒரு பேப்பரில் எழுதி அந்த இடத்தில் விசாரித்தாக என்னிடமும் பொன் பாண்டியிடமும் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பர்ாவை மகஜரில் முதலாவதாகவும் பொன்பாண்டி இரண்டாவது சாட்சியாகவும் கையொப்பம் போட்டு கொடுத்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ 2. மேலும் அந்த இடத்தில் வெட்டுப்பட்டவருடைய இரத்தம் படிந்த மண்ணும் இரத்தம் படியாத மண்ணும் இரவு 10 மணியளவில் டார்ச் லைட் வெளிச்சத்தில் எடுத்தார்கள். மண் எடுத்ததற்கு அத்தாட்சி தயார் செய்து அதில் என்னிடமும் பொன் பாண்டியிடமும் கையொப்பம் வாங்கினர்ாகள. அத்தாட்சியில் முதலாவதாகவும் பொன்பாண்டி இரண்டாவது சாட்சியாகவும் கையொப்பம் போட்டு கொடுத்தோம். அத்தாட்சி அ.சா.ஆ 3. போலீசார் என்னை விசாரித்தார்.

கு.வி: இல்லை